Registered as a Newspaper

பக்கங்கள் நான்கு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 06 செவ்வாய்க்கிழமை (19-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 114

# மல்லாகத்தில் ராணுவத்தினரின் டிராக்டர் புலிகளின் அமுக்க வெடியில் சிதறியது!

## 18 படையினர் பலி; 26 பேர் படுகாயம்

கொழும்பு, மார்ச் 19

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள வலிகாமம் பகுதியில் — மல்லாகத்தில் — நேற்றுக் காலை 9.00 மணியளவில் விடுதலைப் புலிகள் வைத்த அமுக்க வெடியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் டிராக்டர் ஒன்று சிக்கிச் சிதறியது. அதில் இருந்த 18 படையினர் உயிரிழந்தனர்; 26 படையினர் படுகாயமுற்றனர்.

படையினரின் முழுக்கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் — படையினரால் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட — மல்லாகம் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவி இந்த அமுக்க வெடியைப் புதைத்திருக்கக்கூடும் என இராணுவம் நம்புவதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தும்கூட, விடுதலைப் புலிகள் இவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் இன்னமும் ஊடுருவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இரண்டு மாத கால அவசர பயிற்சியுடன்

## இரு நாள்களுக்கு முன் அனுப்பப்பட்ட புதிய படையினரே நேற்றுச் சிக்கினர்!

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணத்தைத் தக்க வைக்கும் நோக்குடன் படைக்கு புதிதாகச் சேர்க்கப்பட்டு — அவசர அவசரமாக இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்பட்டு — இரண்டு நாள்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட படையினரே நேற்றைய அமுக்க வெடித் தாக்குதலுக்கு இலக்கானதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினர் பயிற்சி முடிந்து படையில் இணைக்கப்பட்டு இரண்டு நாள்களுக்கு முன்னர் தான் அங்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் — நன்கு பயிற்சி பெற்ற — படையினரில் சுமார் 15 ஆயிரம் பேரை அங்கிருந்து அகற்றி புதியதோர் இராணுவத் தாக்குதலுக்கு அவர்களை ஈடுபடுத்தும் நோக்குடன் —

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவிலும் புலிகள் நேற்றுத் தாக்குதல்!

### இரு படையினர் கொல்லப்பட்டனர்

சாவகச்சேரி, மார்ச் 19

மட்டக்களப்பு, மாவட்டம் வவுணதீவில் நேற்றுக்காலை 6.15 மணி அளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் இருபடையினர் கொல்லப்பட்டனர். ஐந்து படையினர் காயமடைந்தனர்.

வவுணதீவு இராணுவ முகாமில் இருந்து தடைகளை அகற்ற வந்த படையினர் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

முகாமில் இருந்து 75 மீற்றர் தூரத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இத்திடீர் தாக்குதலில் இரு படையினர் அந்த இடத்தில் கொல்லப்பட ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் ஏ. கே ரகத் துப்பாக்கி — 1, ஏ. கே. மகஸின் — 4, நடுத்தர ரவைகள் — 120 ஆகியவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். (இ-3-7)

### மாஹோவில் தபால்கள்

வடமராட்சி, மார்ச் 19

கொழும்பிலிருந்து குடாநாட்டுக்கான 233 தபால் பொதிகள் மாஹோ கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன

கப்பலின் அடித் தளத்தில் தபால் பொதிகள் இருப்பதால் அவற்றைஇறக்குவதற்கு சில தினங்கள் பிடிக்கும் என துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-173)

### பயணிகள் வான் புரண்டது முகமாலையில் ஒருவர் பலி

மந்திகை, மார்ச் 19

நேற்றுக்காலை பயணிகள் வான் ஒன்று முகமாலையில் தடம்புரண்டதால் வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர் உடல் நசிந்து மரணமானார். வானில் பயணம் செய்தவர்களில் மூவர் படுகாயம் அடைந்து ஆஸ்பத்திரியில் [illegible] ளனர்.

சாவகச்சேரி சப்பச்சி மாவடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி (வயது 33) என்பவரே மரணமானவர் ஆவார்.

மீசாலை, புத்தூர் சந்தியைச் சேர்ந்த சுகாதார கல்வி உத்தியோகத்தர் க. வைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் நிலக்கண்ணி கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 19

மன்னார் இறங்கு துறையில் 42 கிலோ கிராம் நிறையுடைய நிலக்கண்ணியை படையினர் கண்டெடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தின் குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவு இதனை செயல் இழக்கச் செய்து.

அதே வேளை — மட்டக்களப்பின் வடமேற்கே சித்தாண்டியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம் பெற்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

### துணை வேந்தருக்கு பயமுறுத்தல்

கொழும்பு, மார்ச் 19

பேராதனை பல்கலைக்கழக துணை வேந்தருக்கு ''பூமி புத்ர'' என்ற பெயரில் தமிழில் ஓர் அச்சுறுத்தல் கடிதம் வந்துள்ளது.

பல்கலைக் கழகத்தினாலும் அதன் அருகில் உள்ள தாவரவியல் பூங்காவினாலும் பயன் எதுவும் இல்லை என்றும் — அவை நாசமாக்கப்பட வேண்டியவை என்றும் — அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

இது தொடர்பாக பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

### பொலீஸ் நிலையம் முற்றாக அழிப்பு

சாவகச்சேரி, மார்ச் 19

பொலன்னறுவை மாவட்டம் அழிஞ்சுப்பொத்தானை பொலீஸ் நிலையம் மீது கடந்த சனிக்கிழமை விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அந்தப் பொலிஸ் நிலையம் முற்றாக எரித்து அழிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொலீஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு சப் இன்ஸ்பெக்டர் உட்பட 5 பொலிஸார் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மேஜர் றோய் அல்லது சசிகரன் (ஜெகநாதப்பிள்ளை மகேந்திரன் — மட்டக்

(4 ஆம் பக்கம் பார்க்

## கடந்தவாரம் புலிகளுக்கு பெரும் வெற்றி வாரம்

### வெரித்தாஸ் தெரிவிப்பு

மணிலா, மார்ச் 19

யாழ்ப்பாண வீழ்ச்சிக்குப் பின்னர் கடந்த வாரம் இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளுக்கு பெரும் வெற்றிகரமான வாரம் ஆகும்.

மேற்கண்டவாறு வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

முக்கியமாக புலிகள் கடந்த வாரம் தமது தரப்பில் இழப்பு எதுவும் இன்றி மூன்று தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தி உள்ளனர்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் இராணுவ மேலாண்மையை நிலைநிறுத்த வேண்டுமானால் படையினரில் கணிசமான பகுதியினரை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே எடுக்கவேண்டும். இவ்வாறு வெளியே எடுக்கும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தை மீட்க கடும் யுத்தத்தில் மீண்டும் விடுதலைப் புலிகள் இறங்குவார்கள்

இந்த நிலையில் யாழ்ப்பாண யுத்தம் ஒரு வரலாற்றுத் தோல்வியாக இலங்கை அரசுக்கு அமைந்துவிடுமோ? என்றே அஞ்சத் தோன்றுகிறது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## வடமராட்சி நோக்கி 3 ஆம் நாளாக ஷெல்

### வல்வையில் பெண் பலி

வடமராட்சி, மார்ச் 19

வடமராட்சிப் பகுதியை நோக்கி நேற்று மூன்றாவது நாளாக நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் வயோதிபப் பெண் ஒருவர் பலியானார். மூன்று சிறுவர்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

பலாலி முகாமிலிருந்து நேற்றுக் காலை சுமார் 8-30 மணியளவில் சுமார் ஏழுக்கு மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன.

தொண்டமானாறு கெருடாவில் பகுதிகளில் உள்ள தோட்டங்கள், வெட்டவெளிகளிலும் வல்வெட்டித்துறை கொத்தியால் கடல் பகுதியிலும், ஷெல்கள் வீழ்ந்துவெடித்தன.

முதலில் இரு ஷெல்கள் வல்வெட்டித்துறை வேம்படியில், வேம்படி ஒழுங்கையில் வீழ்ந்து வெடித்தன.

கடைக்கு பொருள்கள் வாங்க சென்றுகொண்டிருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோர்தான் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் கைது

மணிலா, மார்ச் 19

ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதுவர் கைது செய்யப்பட்டிருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

குழந்தைகளைக் கடத்தி ஐரோப்பிய நாடுகளுக்கு விற்கும் பாதாள உலகக் கும்பல் ஒன்றுடன் இணைந்து இவர் செயற்பட்டார் என்று ஜோர்தான் அரசு குற்றஞ் சாட்டி இருப்பதாக வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவித்தது. (இ-7)

## மன்னார் தாக்குதல் குறித்து விசாரணைக்கு உத்தரவு

மன்னார் கடல் பகுதியில் கடற் புலிகளின் அதிரடித் தாக்குதலில் புலிகளால் அழிக்கப்பட்டதும், கைப்பற்றப்பட்டதுமான 3 படகுகளும் 22 அடி நீளமான ரோந்து படகுகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கூடுதல் பாதுகாப்புள்ள இந்த பகுதியில் கடற்புலிகள் எவ்வாறு தாக்குதல் நடத்தினர் என்பது குறித்து விசாரணை நடத்துமாறு உயர் மட்டம் உத்தரவிட்டுள்ளது.

மூன்றாம் ஈழப்போரில் இது வரை 14 கடற் கலங்களை ஸ்ரீலங்கா கடற்படை இழந்துள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் Yanmar (30 H.P.) எஞ்சினும், அமுதா கிறைண்டர் இரண்டும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: குணா மில், அல்லையம்பதி, துன்னாலை. [40355]

மிகவும் நல்ல நிலையில் ஒரு கை பாவனையிலுள்ள L. M. L. T-5 ஸ்கூட்டரும், A-30 காரும் விற்பனைக்கு உண்டு. சி. கணேசுராஜன் (கணேஸ்), மே/பா சுப்பிரமணியம், மிருசுவில் வடக்கு (மிருசுவில் சேச் அருகில்) மிருசுவில். [41061]

### விற்பனையாகிறது

1996-97ஆம் ஆண்டுக்கான வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகிறது. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 08, நவீன சந்தை மேல்மாடி (உட்புறம்), சாவகச்சேரி. [சி-2993]

### வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். சில்வர் பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், சில்வர்றே, கறிவாளிகள், செம்புகள், பிளாஸ்ரிக் பாய்கள், பந்திப்பாய், குத்து விளக்கு, சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், ஐஸ்கிறீம் கப்ஸ். வெள்ளை மாளிகை பெரிய அரசடி, சங்கத்தானை. (41051)

### COMPUTER CLASS

பிரத்தியேக கணணி வகுப் வகுப்புக்கள்: புதிய பிரிவுகள் ஆரம்பம்: (22-03-96 / 23-03-96), 3-30 p.m (Basic, Pascal, Base III +, Lotus 123, C++) போதிய செய்முறைப்பயிற்சிகளுடன். தொடர்பு: K. Vignesh, Talent Institute, கோவில் சந்தை, கரவெட்டி. (41020)

## தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி கலைவாணி கலையகத்தைச் சேர்ந்த திரு. இரத்தினம் கனகராசா ஆச்சாரியார் அவர்களை, கைதடி மேற்த அருள்மிகு இணுங்கித் தோட்டக் கந்தசாமி கோவிலின் வர்ணம் பூசும் திருப்பணி தொடர்பாக, அவ்வாலய பரிபாலன சபைத் தலைவர் திரு. சி. இ. முத்துக்குமாரசாமியுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(41063)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. வை. சிவராஜா அவர்களின்
அன்புத் தாயார்

### திருமதி வைரமுத்து அசுபதி

அவர்களின் மறைவிற்கு
எமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
மல்லாகம் மகா வித்தியாலயம்.
(41169)

## கண்ணீர் அஞ்சலி

### A.V. தங்கராசா

(முன்னாள் வடமராட்சிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்)

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராக இருந்து பாடசாலை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய A.V. தங்கராசா அவர்களின் மறைவையொட்டி அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் துயரத்திலும் பங்கு கொள்கின்றோம். அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக உத்தியோகஸ்தர்கள்.
மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
பருத்தித்துறை.
(40359)

## முக்கிய அறிவித்தல்

கப்பல் மூலம் பொருள்களை இறக்குமதி செய்பவர்களுக்கான இட ஒதுக்கீடு சம்பந்தமாக 22-3-96 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு முன்பாக உங்கள் இடங்களை உறுதி செய்து கொள்ளும் முகமாக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றப் பணியகத்தில் உள்ள இணையத்தின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
யாழ். மாவட்ட வணிகர் கழங்களின் இணையம்
(சி/2995)

# இரு வங்கிக்கிளைகளை மீளவும் யாழ். நகரில் இயங்க வைக்க முயற்சி

சாவகச்சேரி, மார்ச் 19

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து தற்சமயம் பருத்தித்துறையில் இயங்கும் இலங்கை வங்கி மேற்தரக் கிளையையும் —

மீசாலையில் இயங்கும் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையையும் — மீளவும் யாழ்ப்பாணத்தில் இயக்க இலங்கை வங்கித் தலைமையகம் முயற்சி மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த இரு கிளைகளையும் யாழ்ப்பாணத்தில் இயங்க வைக்க ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி விடுத்த பணிப்புரையையடுத்து இலங்கை வங்கி தலைமையகம் இந்த முயற்சியை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு கிளைகளையும் யாழ்ப்பாணத்தில் இயங்கச் செய்யுமாறு இலங்கை வங்கித் தலைமையகம் இந்த இரு கிளைகளுக்கும் செய்தி அனுப்பியுள்ளது.

தற்போதுள்ள நிலைமையில் தமது கிளைகள் அங்கு இயங்க முடியாமைக்கான காரணங்களை விளங்கி அந்த கிளைகள் தமது தலைமையகத்துக்கும், ஜனாதிபதிக்கும் கடிதம் அனுப்பியுள்ளன.

இதுவிடயமாக இருவாரத்தில் பதில் அனுப்புவதாக தலைமையகம் கிளைகளுக்கு அறிவித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-3-7-ரி)

## வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

சாவகச்சேரி, மார்ச் 19

மணலாறு மாவட்டம் சாம்பன்குளம் சிங்கள இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை சின்னவன் (இராசரெத்தினம் சிவசங்கர் — சுதுமலை, மானிப்பாய்) அவர்களின் வித்துடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது தற்போதைய இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் மந்துவில் சின்னச் சந்தையடி சனசமூக நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு போராளிகள், பொதுமக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3.00 மணியளவில் இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெறும். அங்கிருந்து மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் வித்துடல் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும் என மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

(இ)

## உள்ளக பயிற்சிக்கு அறுவர் தெரிவு

சாவகச்சேரி, மார்ச் 19

கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் உள்ளக பயிற்சி பெறுவதற்கு ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இன்று முதல் நியமனம் பெறும் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெ. சக்திவேல், செல்வி த. விஜிதா, செல்வி நா. சந்திரா, அ. தத்துவசுதன், திலீபன், கா. நடேசராசா ஆகியோரே நியமனம் பெற்றவர்களாவர். (இ-3)

# கிளிநொச்சியிலிருந்து வெளிமாவட்டத்துக்குதபால்

## வாரம் 3நாள்கள் இடம்பெறுகின்றன

கிளிநொச்சி, மார்ச் 19

கிளிநொச்சியில் இருந்து கிழமைக்கு மூன்று நாள்களுக்கு வெளிமாவட்டத்துக்கான தபால் சேவைகள் நடைபெறுகின்றன என்று கிளிநொச்சி தபாலதிபர் திரு. பொன். கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கான வெளிமாவட்டத் தபால்கள் வாரத்தில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் வவுனியாவில் இருந்து செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்படுகின்றன என்றும் —

அதேபோன்று மறுநாள் இங்கிருந்து தபால்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன என்றும் — அவர் தெரிவித்தார்.

(இ-3)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 10 — 1961

மறைவு: 19 — 03 — 1990

### பஞ்சலிங்கம் பத்மநாதன்

(யூனியன் கல்லூரி பழைய மாணவன்,
S. S. O. துணுக்காய்)

ஆறாம் ஆண்டிதில் ஆற்றாது அழுகின்றோம்,
ஆறு ஆண்டுகளில் நாடெல்லாம் அலைகின்றோம்,
சின்னராசா! நீ நிம்மதியாய் சென்றுவிட்டாய்,
எமக்கெல்லாம் எப்போது நிம்மதி கிட்டும்?

தாய், சகோதரர்.

நெசவுசாலை ஒழுங்கை,
[illegible] கிழக்கு,
தெல்லிப்பழை.
(41164)

## பல்கலைக்கழக மாணவர் படிக்க மின்சார வசதி

பரீட்சைக்குத் தோற்றும் யாழ். பல்கலைக்கழக கலை, விஞ்ஞான பீட மாணவர்கள் படிப்பதற்காக சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளை புதன்கிழமை முதல் தினமும் மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மின்சார வசதி செய்யப்பட்டிருப்பதாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## ஆ. வ. தங்கராசா

கோவிற் கடவை, துன்னாலை மத்தியைச் சேர்ந்த ஆ. வ. தங்கராசா அவர்களின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் நேற்று(18-03-96) நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி தவமணி தங்கராசா
(மனைவி)

கோவிற் கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.
(41167)

## முருகேசு இரத்தினம் J.P.

ஏழாலை மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு இரத்தினம் (சமாதான நீதிவான்) 17 - 03 - 96 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார். ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
பாஸ்கரன் (பபா)
(மகன்)

திருமதி இரத்தினம்,
மே/பா. K. சங்கரப்பிள்ளை,
மணி இல்லம்,
வாணர் குடியிருப்பு,
புலோலி தென் மேற்கு,
பருத்தித்துறை.
(41168)

## திருமதி இராஜதுரை ராஜமணி

திருமதி இராஜதுரை ராஜமணி திருவையாறு, கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜதுரையின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, மகேஸ்வரி, நிர்மலன் (நிர்மலன் - இராஜதுரை, மக்கள் வங்கி, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், லீனஸ் - (Retb. S.A., Kayts A.G. A's Office), மரியநாயகம், ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜோகன், நிலாந்தி, கிறிஷாந்தி, சுபோதினி, ரமேஸ், ரோகான், ரோஷான், நிரோஷினி, பிரியதர்ஷினி, றுக்ஷனா, டிலக்ஷி ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியாரும், காலஞ்சென்ற பொனிப்பஸ், சிசிலியா, ராசையா (றூபினி ரெக்ஸ்ரைல்ஸ், கொழும்பு), இரத்தினம், சூசைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (19-03-96) திருவையாறு, கிளிநொச்சியில் நடைபெறும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நிர்மலன் (மகன்)
(மக்கள் வங்கி, சாவகச்சேரி.)

(41064)

## திருமதி மகேஸ்வரி கந்தஞானி

வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மகேஸ்வரி கந்தஞானி 17-03-1996 அன்று காலமானார்.

இவர் மு. கந்தஞானி (இளைப்பாறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சறோஜினிதேவி கந்தசாமி, சிறீகாந்தா (சவுதி அரேபியா), கௌரிதேவி (சுகநல சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சத்தியசீலன், ராணிதேவி(றவினா றேடர்ஸ், கொழும்பு), மல்லிகாதேவி, பத்மினி (U.K.) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பசுபதிராஜா (அபான்ஸ் லிமிட்டெட், கொழும்பு), ஜெயரஞ்சன் (U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும், ப. துஷியந்தின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

இவரது ஈமக்கிரியைகள் நேற்று (18-03-1996) 10 மணிக்கு நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. கந்தஞானி
(கணவர்)

முகவரி:
மு. கந்தஞானி,
C/o. வை. முத்துச்சாமி,
செல்வராசா வீதி,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.
(41065)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கானல் நீருக்கு பின்னால்...

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அரசாங்க வைத்தியர்களைப் பணிக்கு அமர்த்த அரசு எடுத்த பெருமுயற்சி தோல்வி அடைந்துவிட்டது. ஆரம்பத்தில் இரண்டு வாரங்களுக்குச் சுழற்சி முறையில் கடமையாற்ற ஒப்புக்கொண்டு சில அரசாங்க வைத்தியர்கள் அங்கு சென்றனர். வலிகாமத்தில் தங்களுக்குப் போதிய பாதுகாப்பில்லை என்றும் உரிய வாழ்க்கை வசதிகள் இல்லை என்றும் கூறி, பின்னர் அவர்கள் அங்கு செல்ல மறுத்துவிட்டனர்.

தொண்டர் டாக்டர்களை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பணிக்கு அமர்த்தும் அரசின் முயற்சியும் கைகூடவில்லை.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை இயக்குவதில் அரசு அதீத அக்கறை காட்டுவது அங்கு அகப்பட்டுக்கொண்ட ஒரு சில ஆயிரம் மக்களின் வைத்திய வசதி கருதி அல்ல.

வலிகாமத்தில் நிலைகொண்டுள்ள நாற்பதினாயிரம் இராணுவத் துருப்புகளின் வைத்திய வசதி கருதியே, வைத்தியர்களை யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிச் செல்வதற்கு அரசு பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறது.

யாழ். ஆஸ்பத்திரி உரிய அளவில் இயங்குகிறது என்று காட்டிக் கொண்டால், வலிகாமத்தில் சிவில் நிர்வாகம் பெரிதாக நிலைநாட்டப்பட்டுள்ளது என்று சிங்கள மக்களையும், வெளி உலகத்தையும் நம்பச் செய்துவிடலாம் என்பது அரசின் இன்னொரு நோக்கம்.

வலிகாமத்தில் சிவில் நிர்வாகத்தை உருவாக்குவது என்ற போலியான மாயைக்குள் நின்று அரசு உழல்கிறது. மக்கள் இல்லாத ஒரு பிரதேசத்தில், அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளச் சென்று குடியமரும் வரை, சிவில் நிர்வாகம் நடத்தலாம் என்று நினைப்பது சுத்த முட்டாள் தனம் அன்றி வேறல்ல.

வலிகாமத்தில் இராணுவம் நிலை கொண்டிருக்கும் வரை அப்பகுதி மக்கள் அங்கு திரும்பிச் செல்லப்போவதில்லை. இராணுவம் தமிழ் மக்களை எதிரிகளாகக் கருதி கொன்று வரும்போது, அவர்கள் அங்கு திரும்பிச் செல்வார்களா?

கணக்குக்கு எட்டாத அளவுக்கு கோடானு கோடி ரூபா பெறுமதியான தமது உடைமைகளை இழந்து இடம் பெயர்ந்த மக்களை, வலிகாமத்தில் வசதிகள் செய்து தருவதாக ஏமாற்றித் திரும்ப அழைக்க முடியாது. இது புரியாமல் அரசு அங்கு சிவில் நிர்வாகம் செய்வதாகக் காட்ட முனையும் அரசியல் வரட்டுக் கௌரவத்தில் மூழ்கித் தவிக்கிறது.

இராணுவத்தை வலிகாமத்தில் நிலைகொள்ள வைத்திருப்பதால் உண்டாகும் செலவு, சிவில் நிர்வாகம் நடைபெறுவதாகக் காட்டுவதற்கான வசதிகளுக்குரிய செலவு, என்று எத்தனை காலத்துக்கு அரசு இவ்வாறு செலவிடப் போகிறது?

பயனற்ற ஒரு முயற்சியில் அரசு வீணாகப் பணத்தைச் செலவிட்டு எதனைக் காணப் போகிறது?

''வலிகாமத்தில் சிவில் நிர்வாகம்'' என்ற வெறும் கானல் நீருக்காக சந்திரிகா அரசு ஓடி ஓடிக் களைத்துப் போகும் காலம் வெகுதூரத்தில் இல்லை. அதற்கு முன்னர் அது களை மிகுதியால் மயக்கமுற்று விழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

# சந்திரிகா மீது குற்றப் பிரேரணை கொண்டுவர ஐ. தே. க முயற்சி

## ரணிலுடன் எம். பிக்கள் ஆலோசனை

கொழும்பு, மார்ச் 19

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீது நாடாளுமன்றத்தில் குற்றப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உத்தேசித்துள்ளது.

இது சம்பந்தமாக ஐ. தே. கட்சியைச் சேர்ந்த எம். பிக்கள் பலரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் கலந்தாலோசனை நடத்தியுள்ளார்கள்.

★ புத்தளம் சிமெந்து நிறுவனம் சம்பந்தமாக அமைச்சர் கதிர்காமர் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட லஞ்சம், ஊழல் குறித்து நடவடிக்கை எடுக்கத் தவறியமை.

★ தாம் பிரதமர் பதவி வகித்தபோது தமக்கு லஞ்சம் கொடுக்க முயன்றவர் யார் என்பதனை பகிரங்கப்படுத்த தவறியமை,

★ நாட்டின் இறைமையை விட்டுக் கொடுத்து விடுதலை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியமை.

★ மகா சங்கத்தினர் உட்பட அரசாங்கத்தின் அரசியல் தீர்வுத் திட்டத்தை எதிர்ப்பவர்களை துரோகிகள் என்று கூறியமை.

இவற்றைக் குற்றங்களாகக் குறிப்பிட்டே இந்தப் பிரேரணை கொண்டு வரப் பட்டுள்ளது.

ஜனாதிபதி ஒருவர் மீது குற்றப் பிரேரணை கொண்டு வருவதற்கு, நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் மூன்றின் இரண்டு பங்குக்குக் குறையாதோர் குறிப்பிட்ட பிரேரணையில் ஒப்பமிட வேண்டும் என்பது அரசமைப்பு விதியாகும்.

ஐ. தே. கட்சி எம். பிக்களுடன், பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உறுப்பினர்களும், சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் உத்தேச குற்றப் பிரேரணையில் ஒப்பமிட விருப்பம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

சந்திரிகா மீது குற்றப் பிரேரணை கொண்டுவருவது சம்பந்தமான தீர்க்கமான முடிவு நேற்று நடைபெறவிருந்த ஐ. தே. கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. (அ)

### தமிழீழ வானொலி

செவ்வாய் மாலை

★ 5-00 — ஆரம்பம்
★ 5-02 — எழுச்சி கீதம்
★ 5-10 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியுகம்
★ 6-00 — புதியவை
★ 6-10 — செய்திகள்
★ 6 15 — என் தெரிவு
★ 6-30 —ஒலிபரப்பு நிறைவு

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

செவ்வாய் இரவு

★ 8-0 — ஆரம்பம்
★ 8-02 — கருத்துக்களம்
★ 8-15 — ஊர் சுற்றும் ஒலிவாங்கி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அறிவிப்புகள் தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப் பாடல்கள்

புதன் காலை

★ 7-00 — ஆரம்பம்
★ 7-02 —மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 வரை நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35—பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 அறிவிப்புகளைத் தொடர்ந்து 8-00 மணி வரை மீண்டும் நீங்கள் கேட்டவை.

# கிளாலி ஊடாக தே.எண்ணெய்

தென்மராட்சி, மார்ச் 19

தனியார் வர்த்தகர்களுக்கு கிளாலியூடாக தேங்காய் எண்ணெய் வந்துள்ளதை அடுத்து தேங்காய் எண்ணெய்யின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடந்த வாரம் போத்தல் 240 ரூபாவாக விற்ற தேங்காய் எண்ணெய் நேற்று 210 ரூபாவாக விற்கப்பட்டது.

தினமும் கிளாலியூடாக தேங்காய் எண்ணெய் பரல்கள் வந்தவண்ணமுள்ளதால் மேலும் விலை வீழ்ச்சி ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது (இ-117)

# மட்டக்களப்பு பகுதியில் குண்டுவீச்சு தொடர்கிறது

## வயோதிப மாது, மாணவி பலி

மட்டக்களப்பு, மார்ச் 19

கடந்த சில தினங்களாக மட்டக்களப்புக்கு மேற்கே மண்டூர் வெல்லாவெளிப் பகுதிகளில் தொடரும் விமானக் குண்டுவீச்சு மற்றும் தாக்குதல்களால் வயோதிப மாது ஒருவரும் பாடசாலை மாணவி ஒருவரும் பலியாகியுள்ளனர்.

குண்டு வீச்சுக்கு அஞ்சி பிலாலி வேம்பு, புன்னைக் குளம், பீலி ஆறு, விவேகானந்தபுரம், அம்மன் குளம், வேத்துச்சேனை ஆகிய கிராமங்களில் வாழ்ந்த குடும்பக்கள் இடம் பெயர்ந்துள்ளன

முனைத்தீவு, போரதீவு ஆகிய இடங்களில் இவர்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

# ஐ. தே. கட்சி - பொ. ஐ. முன்னணி மோதலில் தமிழருக்கு துப்பாக்கி சூடு

கொழும்பு மார்ச் 19

மாத்தளை நகரில் கடந்த வெள்ளிக்கிழமை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கும், ஐ. தே. க. ஆதரவாளர்களுக்கும் இடையில் நடந்த மோதலின்போது துப்பாக்கி வேட்டுக்கு இலக்கான சண்முகம் என்ற தமிழரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இரு பகுதிக்கும் இடையில் மோதல் நடந்த போது இவர் மேல்மாடியில் நின்ற சமயமே குரல்வளையில் சூட்டுக்கு ஆளானார்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த மத்திய மாகாண அமைச்சர் வசந்த அனுவிகார கண்டியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மத்திய மாகாண அமைச்சரின் மெய்பாதுகாவலர் ஒருவரையும், ஐ. தே. க. ஆதரவாளர் ஒருவரையும் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றனர்.

மாத்தளை நகரபிதாவின் கார் சேதத்துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பிரதேச சபையின் பொது மக்கள் ஐக்கிய முன்னணி எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரையும், அதே கட்சியைச் சேர்ந்த நகரசபை உறுப்பினர் ஒருவரையும் பொலீஸ் நிலையம் அழைத்து வாக்குமூலம் பெற்ற பின்னர் மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

நீதிமன்ற உத்தரவுப்படி அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(இ-3)

# பஜிரோ வாகனம் களவு; யாழ். தமிழரும் கைது

கொழும்பு, மார்ச் 19

மகாவலி அமைச்சுக்குச் சொந்தமான பஜிரோ வாகனம் ஒன்று திருடப்பட்டது தொடர்பாக யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் உட்பட பத்துப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருடிய வாகனத்தை இவர்கள் பயங்கரவாத இயக்கம் ஒன்றுக்கு விற்கும் சாத்தியம் இருந்ததாக பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாத முற்பகுதியில் வெலிகந்தப்பகுதியில் வைத்து இந்த வாகனம் களவாடப்பட்டது. (இ)

# கொழும்பு துறைமுகத்துக்கு வந்த கொள்கலனில் புலிகளுக்கு ஆயுதம்?

கொழும்பு, மார்ச் 19

கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த ஐந்து கொள்கலன்களில் ,விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்த ஐந்து கொள்கலன்களும் போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு துறைமுகத்திலிருந்து எவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டன என்பது குறித்து சி. ஐ டி. பொலீஸார் இப்போது தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள மூன்று நிறுவனங்களின் பெயருக்கு வந்திருந்த குறிப்பிட்ட ஐந்து கொள்கலன்களும் போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன.

இந்தக் கொள்கலன்கள் எங்கே கொண்டுசெல்லப்பட்டன என்பது இதுவரை தெரியவில்லையாயினும், அவற்றில் இருந்த பொருள்கள் — ஆயுதங்கள் — கொழும்பிலேயே பறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பொலீஸார் நம்புகின்றனர்.

இக் கொள்கலன்கள் சம்பந்தமாக துறைமுக அதிகாரிகள் பலரையும், கோடீஸ்வரரான தமிழ் வர்த்தகர் உட்பட ஏழு பேரையும் இதுவரை கைது செய்துள்ளனர்.

துறைமுகத்தில் வந்திறங்கிய சந்தேகத்துக்குரிய மேலும் பத்துக் கொள்கலன்களுக்கு பொலீஸார் ''சீல்'' வைத்து எடுத்துச் செல்லாமல் தடுத்துள்ளனர்.

(அ)

# மாந்திரீகப் பொருளுடன் ஜெயலலிதாவின் படமும்!

கொழும்பு, மார்ச் 19

அண்மையில் சுங்கப் பகுதியினர் கைப்பற்றிய கடத்தல் பொருள்களில் மாந்திரீகப் பொருள்கள் கொண்ட பொதிக்குள் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் படமும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுங்கப்பகுதியைச் சேர்ந்த உதவி சுப்பிரிண்டென் சமந்தா குணசேகர கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் இத்தகவலை வெளியிட்டார்.

சுங்கப்பகுதியினர் நடத்திய சோதனைகளின் போது, மாந்திரீகத்துக்கு பயன் படுத்தப்படும் மிருகங்களின் அவயங்கள் அடங்கியிருந்த பொதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும்—

அந்தப் பொதிக்குள்ளேயே செல்வி ஜெயலலிதாவின் படமும் அகப்பட்டதாகவும் — அவர் கூறினார். (இ-3)

# ஒய்வூதிய திணைக்களம் இடம் மற்றாம்

மத்திய வங்கி குண்டு வெடிப்பை யடுத்து சேதமடைந்த ஒய்வூதியத் திணைக்களம் மாளிகாவத்தை செயலக கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

கோட்டை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருந்த ஓய்வூதியக் கட்டடத்தின் திருத்த வேலைகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(இ-3)

# மட்டக்களப்பில் வீடியோ எடுக்கத் தடை

மட்டக்களப்பில் பொலீஸாரின் அனுமதியின்றி வீடியோ படம் எடுப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின் படி வீடியோ படம் எடுப்பதற்கு பொலீஸாரிடம் அனுமதி பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை இடம்பெயரச் செய்தே வலிகாமத்தை கைப்பற்ற முடிந்தது

## அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிக்கை

கொழும்பு மார்ச் 19
பல லட்சக் கணக்கான தமிழ் மக்களின் இடம் பெயர்வுக்கு மத்தியிலேயே ஸ்ரீலங்கா அரசாங்கப் படையினரால் கடந்த வருட இறுதியில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முடிந்தது.

இவ்வாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மனித உரிமைகளைப் பேணும் நிலைப்பாடு குறித்து அமெரிக்க ராஜாங்க அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கான செயற்பாடுகளை இந்த அறிக்கை விவரிக்கிறது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நடைமுறையில்இருந்த வேளையிலும் அரச படைகள் மனித உரிமை மீறல் சம்பவங்கள் சிலவற்றில் ஈடுபட்டிருந்ததாகவும் —

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த பின்னர் படையினரின் மனித உரிமை மீறல்கள் பெரும் எண்ணிக்கையில் அதிகரித்தன — என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் கிழக்கு மாகாணத்தில் அரச படைகள் நடத்திய படுகொலைகள் கிழக்கு மாகாணத்திலேயே அதிகம் என்றும் —

படுகொலை செய்யப்பட்டவர்கள் அப்பாவிப் பொது மக்களே என்றும் —

படுகொலைகளை நடத்திய குற்றவாளிகள் வருட இறுதி வரை கைது செய்யப்படவில்லை என்றும் — அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்தவுடன் கொழும்பில் 21 தமிழ் இளைஞர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறித்தும் —

அவர்கள் பட்டினிபோடப்பட்டும். சித்திரவதை செய்யப்பட்டும் கொலை செய்யப்பட்டது குறித்தும் — அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது

மனித உரிமை மீறல்கள் குறித்த விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இந்த அறிக்கையில் ஆங்காங்கே தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசின் சட்ட ஆவணம் பிரச்சினை தீர உதவாது

## ஈ. பி. டி. பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 19
தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சட்ட ஆவணம் இனப் பிரச்சினையை நிரந்தரமாக தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் ஒரு காத்திரமான நடவடிக்கை அல்ல என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் எடுத்துக் கூற விரும்புகிறோம்.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பித்துள்ள திருத்தங்கள் தொடர்பான மகஜரில் ஈ. பி. டி. பி. மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு சமர்ப்பித்துள்ள மகஜரின் முக்கிய சில அம்சங்கள் வருமாறு:

★ தென்னிலங்கையிலுள்ள சிங்களத் தலைவர்களில் பெரும்பாலானோர் இந்த நாட்டை சீரழித்துள்ள இனப் பிரச்சினையின் வரலாற்று, சமூக, பொருளாதார பின்னணியை இன்னும் விளங்கிக் கொள்ளவில்லை. இந்த விளக்கம் இருந்திருக்குமேயானால் சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் ஒரே அடிப்படையிலான பிரதேசங்களை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் மீண்டும் மேற்கிளம்புவதை நாம் கண்டிருக்க மாட்டோம்.

★ சட்ட ஆவணத்தில் தரப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு ஆலோசனைகள், சுய நிர்ணய உரிமைகளுக்கான அதிகாரப் பகிர்வை கோரி நின்ற பிராந்தியங்களுக்கும், இந்த பகிர்வு எத்தகைய தொரு அர்த்தத்தையும் தராத பிராந்தியங்களுக்கும் சமனாக வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வகையான பிராந்தியங்களையும் ஒன்றாக்கி நோக்குவது எத்தகைய அரசியல் சமாதானத்தையும் கொண்டுவரப்போவதில்லை.

★ இந்த அதிகாரப் பரவல் ஆலோசனைகளில் தமிழ் பேசும் மக்களின் அச்சங்களை அகற்றும் நோக்குடன் சொண்டுவரப்பட்டுள்ள ஒரு சரத்தைத்தானும் காண முடியாதுள்ளது. (இ-3)

# அத்துலத் முதலி கொலை!

## ஐ. தே. க. பிரமுகர் கைது

லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பாக விசாரணை செய்து வரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் உத்தரவையடுத்து ஐ. தே. கவைச் சேர்ந்த மேல் மாகாணசபை உறுப்பினர் ஒருவர் ரகசியப் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

அவரது இல்லத்தில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட அவர், நாலாவது மாடியில் வைத்து விசாரிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# கொழும்பை அதிர வைத்த பட்டாஸ் வெடிச்சத்தங்கள்

## இலங்கை அணி நாடு திரும்பியது

கொழும்பு, மார்ச் 19
உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஸ்ரீலங்கா அணி வெற்றி ஈட்டிய போது கொழும்பு நகரில் மக்கள் வெடிகளைக் கொழுத்தி ஆரவாரம் செய்தனர்.

கொழுத்தப்பட்ட வெடிகளில் புகைமூட்டம் ஆங்காங்கே வானத்தை மறைத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இலங்கை கிரிக்கெட் அணியை கௌரவிக்கும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுப் பிற்பகல் அலரி மாளிகையில் தேநீர் விருந்தளித்தார்.

இந்த வைபவத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசேட விமானம் மூலம் நேற்று பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய குழுவினரை ஆயிரக்கணக்கான ரசிகர்கள் வரவேற்றனர்.

அங்கிருந்து மோட்டார் பவனியாக அவர்கள் அலரி மாளிகைக்கு அழைத்துச்செல்லப்பட்ட சமயம் வீதியில் மக்கள் கூடி நின்று அவர்களை வரவேற்றனர். (இ-3)

## முதன்மை ஆசிரியருக்கான கூட்டம்

வலயம் இரண்டைச் சேர்ந்த சகல முதன்மை ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் அமைந்துள்ள வலயம் இரண்டின் அலுவலகத்தில் நடைபெறும்.

### வடமராட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வல்வெட்டித்துறை அமெரிக்க மிஷன் பாடசாலை ஒழுங்கையில் வசித்த திருமதி வேலும் மயிலும் பரஞ்சோதி (76 வயது) என்ற வயோதிபப் பெண் அப்போது பலியானார்.

ஏனையவர்களான மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து வேம்படியில் வசித்து வந்த அருணகிரிநாதன் பதுமலட்சுமி (47 வயது) இவரது மகளான அருணகிரிநாதன்பத்மாவதி(13வயது), வேம்படியைச் சேர்ந்த மோகனதாஸ் வளர்மதி (14 வயது) அதே இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் வினோத் (12 வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களில் வைத்திலிங்கம் வினோத் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையிலும் ஏனையோர் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வேம்படி ஒழுங்கையில் ஷெல் விழுந்த சுற்றாடலில் உள்ள 15 அடி உயரமான மதில் சுவரும், சுமார் 6 வீடுகளும் சேதமடைந்துள்ளன.
(இ-173-15-180)

### பயணிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தீஸ்வரன் (வயது 62) முகமாலையைச் சேர்ந்த கோ. பாக்கியம் (வயது 62) மிருசுவில் உசனைச் சேர்ந்த க. தங்கமுத்து (வயது 55) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

வானில் பயணம் செய்தவர்களில் அனேகமாக எல்லோருமே சிறு சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

காயமடைந்தவர்களில் க. வைதீஸ்வரனும், கந்தையா தங்கமுத்துவும் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான வான் திடீர் என பாதையை விட்டு விலகி சைக்கிளையும் மோதிவிட்டு தடம்புரண்டதாகக் கூறப்படுகிறது.

வான் தடம் புரண்டபோது அதில் சுமார் 30 பயணிகள் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
(இ-15-117113)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்

### மன்லா[illegible]த்தில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
முடிகிறது என்பது பாதுகாப்புப் படையினருக்கு உளவியல் ரீதியில் பலத்த ஓர் அடியாகும் என பி. பி. ஸி. குறிப்பிட்டது.

வலிகாமத்திலிருந்து வெளியேறிய மக்களை மீண்டும் வலிகாமத்துக்கு திரும்புமாறு அரசு அழைப்பு விடுத்தாலும்—

அரசு தெரிவிப்பதுபோல அங்கு பாதுகாப்பு நிலைமை இல்லை என்ற செய்தி இந்தத் தாக்குதல் மூலம் விடுக்கப்பட்டிருப்பதாக பிரபல பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதலில் 14 படையினர் பலியானதாக கொழும்பில் நேற்று பிற்பகலில் தெரிவிக்கப்பட்டதாயினும்—

பதினெட்டுப் படையினர் உயிரிழந்ததாக நேற்றிரவு பி. பி. ஸி. தெரிவித்தது.
(உ-3-6-7)

### இரு நாள்களுக்கு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அவர்களின் இடத்துக்கு— யாழ்ப்பாணத்துக்கு— இந்தப் புதிய படைச் சிப்பாய்கள் அனுப்பப்பட்டிருந்தனர் என்றும்—

அவர்களில் ஒரு பகுதியினரே புலிகளின் அமுக்க வெடியில் நேற்று சிக்கினர் என்றும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-36-7)

### பொலீஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
களப்பு), லெப்டினன்ட் வண்ணன் [தம்பிராசா மோகன் — மட்டக்களப்பு), 2 ஆம் லெப்டினன்ட் ரவிச்சந்திரன் (தம்பிராசா தவராசா — மட்டக்களப்பு) ஆகிய போராளிகள் வீர மரணமடைந்தனர்.
(இ-3-7)

## நஷ்டஈட்டுக்கு 15 ஆயிரம் பேரே விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 19
இலங்கையில் உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக இதுவரை காணாமற்போன 40 ஆயிரம் பேரில் 15 ஆயிரம் பேர் மட்டுமே மரணச் சான்றிதழையும் நிவாரணத்தையும் பெற்றுள்ளனர் ''ரேப்பியா'' உதவிப் பணிப்பாளர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம் 14 கோடியே 50 லட்சம் ரூபாவை ஒதுக்கி இருந்தது.

இவர்களின் குடும்பத்தவர்களுக்கு நஷ்டஈடும், மரணச் சான்றிதழும் வழங்க அரசாங்கம் இணங்கி உள்ளது.

ஆனால் இதுவரை 15 ஆயிரம் விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளன என்றும் 55 லட்சம் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுகிறது. (இ)

## மஹோவில் பற்றறிகள் தேங்காய்

வடமராட்சி, மார்ச் 19
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தகத் திணைக்களம் ஆகியவற்றுக்கான பொருள்களை ஏற்றிக் கொண்டு மாஹோ கப்பல் நேற்று முற்பகல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் ரோர்ச் பற்றறிகள், நல்லெண்ணெய், ஆயிரக்கணக்கான தேங்காய்கள் என்பனவும் வந்து சேர்ந்துள்ளன.

பொருள்களை இறக்கும் பணி உடனடியாக ஆரம்பமானது. (இ-173)


# தர்மிசா ரவல்ஸ்

வாரத்தில் இரு தடவைகள் இடம்பெற்ற எமது சேவை இவ்வார முதல் மூன்று தடவைகள் இடம்பெற உள்ளதால் ஏற்கனவே பிரயாணப் பதிவுகளை மேற்கொண்ட அனைத்து நோயளர்களும் வயோதிபர்களும் 20 - 03 - 96 புதன் காலை 10.00 மணிக்கு தவறாது சமூகம் தரவும்.

புதிய பதிவுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
(சி/2996)


# மரண அறிவித்தல்

## குணரத்தினம் மகேஸ்வரி

கொல்லங்கலட்டி, இளானையைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது டச்சுறோட், மீசாலை வடக்கை வசிப்பிடமாகக் கொண்டிருந்த குணரத்தினம் மகேஸ்வரி நேற்று [18-03-1996) அகால மரணம் அடைந்துவிட்டார்.

இவர் குணரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சிவசுப்பிரமணியம், தேவமலர், இராசமலர், உதயகுமார், சிவகுமார், இராசேஸ்வரி, சந்திரகுமார், நகுலேஸ்வரி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகசிங்கம், மகாலிங்கம் [பஞ்சு - திருப்பதி ரெக்ஸ்], செல்வரத்தினம் ஆசியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [19-03-96] செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது தற்போதய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுப்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தகவல்:
பஞ்சு
[மைத்துனர்]

டச்சு வீதி,
மீசாலை வடக்கு.

[41171]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 19-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org